**தினகரன் (16.06.2024)**



▶ ரத்த தானம் வழங்கியவர்களுக்கு பழச்சாறு, ஹார்லிக்ஸ், குளுக்கோஸ் மற்றும் பழங்களை காகித நிறுவனத்தின் முதன்மை பொது மேலாளர் (இயக்கம்-பொறுப்பு) நாகராஜன், மனிதவள பொது மேலாளர் கலைச்செல்வன், பாதுகாப்பு துணை பொது மேலாளர் இராதாகிருஷ்ணன், முதன்மை மேலாளர் (மனிதவளம்) சிவக்குமார் ஆகியோர் வழங்கினர்.

### வேலாயுதம்பாளையம் காகிதபுரம்

# காகித ஆலை சார்பில் 174 பேர் ரத்த தானம்

**வேலாயுதம்பாளையம், ஜூன் 16:** வேலாயுதம்பாளையம் காகிதபுரம் தமிழ்நாடு காகித ஆலை சார்பில்174 இ ரத்த தானம் வழங்கினர்.

உலகம் முழுவதும் ரத்த தானம் வழங்குவதால் ஒரு உயிர் காக்கப்படுவது நாம் அறிந்த ஒன்று. பெறப்படும் இரத்த கொண்டு எதிர்பாராமல் விபத்தில் ஏற்படுபவர்களுக்கும், உடல்நலம் பாதிக்கப்பட்டு ரத்த ஓட்டம் குறைவாக உள்ள வர்களுக்கும் தானமாக பெற்ற ரத்தத்தை வழங்கப்படுகிறது.

பொதுமக்களிடம் இரத்தம் வழங்குவதை ஊக்குவிக்கும் முகமாக தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் மற்றும் கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இணைந்து இரத்த தான முகாமினை காகித நிறுவனத்தின் சிலப்பதிகாரம் அரங்கத்தில் ரத்த தான முகாம் நடைபெற்றது.

இம்முகாமின் துவக்க விழாவில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித் நிறுவனத்தின் முதன்மை பொது மேலாளர் (இயக்கம்-பொறுப்பு) நாகராஜன் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சிக்கு பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன், துணை பொது மேலாளர் (பாதுகாப்பு) இராதாகிருஷ்ணன், முதன்மை மேலாளர் (மனிதவளம்) சிவக்குமார் ஆகியோர் முன்னிலை வைத்தனர். செய்தொழில் சுகாதார மைய மருத்துவர் ராஜா, கரூர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி இரத்த வங்கி மருத்துவ அலுவலர் அறிவழகன் ஆகியோர் முகாமில் கலந்து கொண்டனர். இம்முகாமில் கலந்துகொண்டு இரத்த தானம் செய்தவர்களுக்கு பழச்சாறு, ஹார்லிக்ஸ், குளுக்கோஸ் மற்றும் பழங்கள் வழங்கப்பட்டன.

இம்முகாமில் ஆலைப் பணியாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர், ஒப்பந்த பணியாளர்கள், தொழில் பழகுநர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் ஆர்வத்துடன் கலந்து கொண்டு ரத்த தானம் செய்தனர்.

இம்முகாமில் மொத்தம் 174 நபர்கள் பங்கேற்று இரத்த தானம் செய்தனர். இரத்த தான முகாமில் பங்கேற்று ரத்த தானம் செய்தவர்களுக்கு கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் சார்பில் சான்றிதழ்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**தினமணி (16.06.2024)**

# கரூர் காகித ஆலையில் ரத்ததானம்



கரூரில் சனிக்கிழமை நடைபெற்ற முகாமில் ரத்ததானம் வழங்கிய ஆலை அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள்.

**கரூர், ஜூன் 15:** புகளூர் காகித ஆலை சார்பில் ரத்த தான முகாம் சனிக்கிழமை காலை நடைபெற்றது.

ஆலையில் நடைபெற்ற முகாமை ஆலையின் முதன்மை பொதுமேலாளர்(இயக்கம்) எஸ். நாகராஜன், பொதுமேலாளர் (மனிதவளம்) கே. கலைச்செல்வன், துணை பொதுமேலாளர் (பாதுகாப்பு) கே. ராதாகிருஷ்ணன், முதன்மை மேலாளர்(மனிதவளம்) கே.எஸ்.சிவக்குமார், செய்தொழில் சுகாதார மைய மருத்துவர் ராஜா மற்றும் கரூர் மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையின் ரத்த வங்கி மருத்துவ அலுவலர் அறிவழகன் ஆகியோர் தொடக்கிவைத்தனர்.

முகாமில் ஆலைப்பணியாளர்கள், ஒப்பந்தப் பணியாளர்கள், தொழில் பழகுநர்கள், பொதுமக்கள் என 174 பேர் ரத்த தானம் செய்தனர். அவர்களுக்கு கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சார்பில் சான்றிதழ் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முன்னதாக ஆலையில் முதியோருக்கு எதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு தின உறுதிமொழியை ஆலையின் முதுநிலை மேலாளர் (மனிதவளம்) ஜே.வெங்கடேசன், உதவி மேலாளர் (கொள்முதல்) சி.ரவிச்சந்திரன் ஆகியோர் வாசிக்க, ஆலை பணியாளர்கள் ஏற்றனர்.

**இந்து தமிழ் திசை (17.06.2024)**



➠ புகளூர் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன (டிஎன்பிஎல்) வளாகத்தில் நேற்று நடைபெற்ற ரத்த தான முகாம்.

# புகளூர் டிஎன்பிஎல் ஆலையில் ரத்த தான முகாம்

● கரூர்

கரூர் மாவட்டம் புகளூர் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன (டிஎன்பிஎல்) வளாகத்தில், ரத்த தான முகாம் நேற்று நடைபெற்றது.

இந்த முகாமை டிஎன்பிஎல் முதன்மை பொது மேலாளர் (இயக்கம்– பொறுப்பு) எஸ்.நாகராஜன், பொது மேலாளர் (மனிதவளம்) கே.கலைச்செல்வன், துணைப் பொது மேலாளர் (பாதுகாப்பு) கே.ராதாகிருஷ்ணன், முதன்மை மேலாளர் (மனிதவளம்) கே.எஸ்.சிவக்குமார், செய்தொழில் சுகாதார மைய மருத்துவர் ஏகேகே.ராஜா, கரூர் அரசு மருத்துவக் கல்லூரி ரத்த வங்கி மருத்துவ அலுவலர் அறிவழகன் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

இதில், ஆலைப் பணியாளர்கள் உட்பட மொத்தம் 174 பேர் ரத்த தானம் செய்தனர்.

**காலைக்கதிர் (17.06.2024)**

# புகளூர் டி.என்.பி.எல்., ஆலையில் ரத்த தான முகாம்

**கரூர், ஜூன் 17–**

கரூர் மாவட்டம் புகளூரில், தமிழ்நாடு செய்தி தாள் காகித ஆலை நிறுவனம் சார்பில், ரத்த தான முகாம் நடந்தது.

முதன்மை பொதுமேலாளர் [இயக்கம்] நாகராஜன் தொடங்கி வைத்தார். ஆலை பணியாளர்கள், ஒப்பந்த பணியாளர்கள், தொழில் பழகுனர்கள், பொதுமக்கள் என, 174 பேர் ரத்த தானம் செய்தனர். அவர்களுக்கு, கரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையால் சான்றிதழ் வழங்கப்பட்டது.

முன்னதாக ஆலையில், முதியோருக்கு எதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு தின உறுதி மொழியை ஆலையின் முதுநிலை மேலாளர் [மனிதவளம்].வெங்கடேசன், உதவி மேலாளர் [கொள் முதல்] ரவிச்சந்திரன் ஆகியோர் வாசிக்க, ஆலை பணியாளர்கள் ஏற்றனர்.

**தினத்தந்தி (17.06.2024)**



# ரத்ததான முகாம்

நொய்யல், ஜூன்.17-

புகழூர் காகித ஆலை, கரூர் அரசு மருத்துவக்கல்லூரி சார்பில் காகித ஆலை சிலப்பதிகார அரங்கத்தில் ரத்ததான முகாம் நடைபெற்றது. முகாமை காகித ஆலை முதன்மை பொது மேலாளர் (இயக்கம்- பொறுப்பு) நாகராஜன், பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன், துணைப் பொது மேலாளர் (பாதுகாப்பு) ராதாகிருஷ்ணன், முதன்மை மேலாளர் (மனித வளம்) சிவக்குமார், செய்தொழில் சுகாதார மைய மருத்துவர் ராஜா, கரூர் ம்ாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி ரத்த வங்கி மருத்துவ அலுவலர் அறிவழகன் ஆகியோர் தொடங்கி வைத்தனர். முகாமில் ஆலை பணியாளர்கள், ஒப்பந்த பணியாளர்கள், தொழில் பழகுனர்கள், பொதுமக்கள் என மொத்தம் 174 பேர் ரத்ததானம் செய்தனர். ரத்த தானம் செய்தவர்களுக்கு பழச்சாறு, ஹார்லிக்ஸ், குளுக்கோஸ் மற்றும் பழங்கள் வழங்கப்பட்டன. முகாம் காலை 8.30 மணி முதல் மதியம் 1 மணி வரை நடைபெற்றது. ரத்த தானம் செய்தவர்களுக்கு கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சார்பில் சான்றிதழ் வழங்கப்பட்டன.

# மாலை மலர்

இந்தியாவின் No.1 மாலை நாளிதழ்

**MAALAI MALAR**

திருச்சி 16-6-2024 (ஞாயிற்றுக்கிழமை) 8 பக்கம் ₹ 5 ★ | மலர் 47 இதழ் 184

TRICHY 16-6-2024 (SUNDAY) 8 PAGES ₹5 | VOL: 47 ISSUE: 184




ரத்த தான முகாம் நடந்தபோது எடுத்த படம்.

## புகழூர் காகித ஆலையில் ரத்த தான முகாம்

வேலாயுதம்பாளையம் ஜூன்.16—

கரூர் மாவட்டம் புகழூர் காகிதபுரத்தில் உள்ள தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவனம் மற்றும் கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இணைந்து நடத்திய ரத்ததான முகாம் காகித ஆலை சிலப்பதிகார அரங்கத்தில் நடைபெற்றது.

காகித ஆலை முதன்மை பொது மேலாளர் (இயக்கம்— பொறுப்பு) நாகராஜன், பொது மேலா ளர்( மனி தவளம்) கலைச்செல்வன் , துணைப் பொது மேலாளர் (பாது காப்பு) ராதாகி ருஷ்ணன், முதன்மை மே லாளர்( மனிதவளம்) சிவக்குமார், செய்தொழில் சுகாதார மைய மருத்துவர் ராஜா, கரூர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி ரத்த வங்கி மருத்துவ அலுவலர் அறிவழகன் ஆகியோர் கலந்துகொண்டு முகாமை துவக்கி வைத்தனர்.

முகாமில் கலந்து கொண்டு ரத்த தானம் செய்தவர்களுக்கு பழச்சாறு, ஹார்லிக்ஸ் ,குளுக்கோஸ் மற்றும் பழங்கள் வழங்கப்பட்டது .முகாமில் ஆலை பணியாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் ,ஒப்பந்த பணியாளர்கள் ,தொழில் பழகுனர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டு ரத்த தானம் செய்தனர்.

முகாமில் 174 பேர் கலந்து கொண்டு ரத்த தானம் செய்தனர். ரத்த தானம் செய்தவர்களுக்கு கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சார்பில் சான்றிதழ் வழங்கப்பட்டது.